# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அநுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,961 — 1933 ம் ௵ தைமீ 12 ந் திகதி, வியாழக்கிழமை.


## Part IV. நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

I/169

**"1893 ம் ஆண்டின் இறைச்சிக்காரர் சட்டம்."**

வடமாகாணத்தைச்சேர்ந்த யாழ்ப்பாண டிஸ்திறிக ஊர்ப் பிரிவின் சௌக்கியாதாரசங்க எல்லைகளுக்குள் உள்ள ஆடுமாடுகள் அடிக்கும பொதுக் கொட்டில்களினதும் ஆடுமாடுகள் அடிப்பதறகென்று ஒழுங்குசெய்து விடப்பட்டிருக்கும் இடங்களினதும் விஷயத்தில் தக்க அதிகாரத்தரால் அதாவது வடமாகாணக் கவண்மேந்து ஏஜன்றால் 1893 ம் ஆண்டின் இறைச்சிக்காரர் சட்டத்தின் 23 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்டு, மேற்சொல்லிய பிரிவின்படியும் இலங்கை இராச்சிய மந்திரசபை சம்பந்தமாக 1931 ம் ஆண்டில் ஆலோசனைச் சபையிற் செய்த கட்டளையின் 93 ம் அமிசத்தின்படியும் தம்மீது வைக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுக்க விதிகள்.

சாள்ஸ் படுவண் தடாவெ,
சுவஸ்தான காரியபரிபாலன மந்திரி.

சுவஸ்தான காரியபரிபாலன அதிகாராங்கம்,
கொழும்பு, 1933 ம் ௵ (ஜெனவரி) தைமீ 7 ந் தேதி.

#### ஒழுக்கவிதிகள்.

1. ஆடுமாடுகள் அடிக்கும் ஒரு பொதுக் கொட்டிலிருக்கும் சௌக்கியாதாரப் பட்டணத்தின் அல்லது கிராமத்தின் சௌக்கியாதாரப் பரிசோதகரே ஆடுமாடுகள் அடிக்கும் அப்பொதுக் கொட்டிலின் பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தராக விருக்கவேண்டுவதுமன்றி, சட்டத்தின் 17 ம் பிரிவின்படியான அறிவித்தலை ஏற்பதற்கும் இதனால் அதிகாரம் கொடுக்கப்படுகின்றார்.

2. எந்த மிருகத்தையும் இறைச்சிக்கு அறுக்கவென்று எண்ணியிருக்கும் நேரத்துக்கு 24 மணித்தியாலங்களுக்குள் அம்மிருகம் வைத்திய உத்தியோகஸ்தரால் சோதித்துப் பார்க்கப்பட்டு அது நோயில்லாத மிருகமென்று எழுத்து மூலமாய் அவரால் அறிவிக்கப்பட்டிருந்தாலன்றி அம்மிருகத்தை ஆடுமாடுகள் அடிக்கும் ஒரு பொதுக்கொட்டிலில் அறுக்கப்படாது.

3. இறைச்சிக்கு அறுக்கும்படி ஆடுமாடுகள் அடிக்கும் ஒரு பொதுக் கொட்டிலுக்குக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு மிருகத்துக்கும் இதன் கீழ் குறித்திருக்கும் வேதனத்தை ஆடுமாடுகள் அடிக்கும் கொட்டிலை உபயோகிப்பதற்குக் கொடுக்கும் சலாராகக் கொடுத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| ஒரு மாட்டுக்கு .. .. | 50 சதம் |
| ஒவ்வொரு செம்மறியாட்டுக்கும் ஒவ்வொரு வெள்ளாட்டுக்கும் .. | 25 ,, |

4. ஆடுமாடுகள் அடிக்கும் கொட்டிலின் பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தர் ஒவ்வொரு மாசமும் முடிந்தபின் ஏழு நாளுக்குள் சௌக்கியாதாரசங்கத் தலைவரிடம் அம்மாசத்திற் தாம் சேர்த்த வேதனப் பணத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்.

---

### காணி விற்பனவுகள்.

**Jaffna No. 48.**—1933 ம் ஆண்டு பங்குனிமீ 4 ந் திகதி, சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு கிராமக் கோட்டில் வட மாகாணத்து கவற்ணமேந்து ஏஜன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகள், அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும்.

34 காணித் துண்டுகள், வட மாகாணத்து நெடுந்தீவுப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 8,180. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்புவிலை வக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | ஆயிரவெளி .. | ஏ. வேலுப்பிள்ளையும் கே. சுப்பிரமணியமும் | சிறுகாடு .. .. | 3 3 37 | 20 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. | தீர்ப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 8,182. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 1 | பள்ளம் | .. — | .. தரவைநிலம், கடல்கரைக்காக சேமிக்கப்படவேண்டியது | 1 | 2 | 19 | —* |
| 2 | பள்ளம் | .. ஆர். ஐயத்துரையும் மற்றும் இருவரும் | தரவைநிலம் .. .. | 2 | 1 | 22 | 25 |
| | | உரித்தாளி—முடியும் எஸ். வயிரவனும். | | | | | |
| 3 | கெரிநட்டி | .. — | .. ஒரு கிணறுள்ளது காணி .. | 0 | 0 | 26 | 25 |
| | | உரித்தாளி—முடியும், ஆர். சுப்பிரமணியமும், எம். சடையரும். | | | | | |
| 4 | கொல்லை | .. — | .. ஒரு வயது முதிர்ந்த பனையுள்ள தரவைநிலம் | 0 | 1 | 10 | 25 |
| | | உரித்தாளி—முடியும் கந்தன் முருகனும். | | | | | |
| 5 | கொல்லை | .. — | .. 10 வருஷம் சென்ற 1 பனையுள்ள தரவைநிலம் | 0 | 0 | 14 | 25 |
| | | உரித்தாளி—முடியும், என். கார்த்திகேசு பெண் வேலாசிப்பிள்ளையும். | | | | | |
| 6 | கொல்லை | .. — | .. ஒரு 10 வருஷம் சென்ற பனையும் ஒரு முதுபனையும் இரண்டு கிணறுகளும் உள்ள தரவைநிலம் | 0 | 1 | 15 | 25 |
| | | உரித்தாளி—இல்லை. | | | | | |
| 7 | பள்ளம் | .. — | .. தரவைநிலம் வண்டில்பாதைக்காக சேமிக்கப்படவேண்டியது | 0 | 0 | 25 | —* |
| | | பிளான் இலக்கம் 8,230. குறிச்சி—நெடுந்தீவு தென்கிழக்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 2 | காட்டுரமன்சல்லி | .. — | .. தரவைநிலம் றோட்டுக்காக சேமிக்கப்படவேண்டியது | 0 | 0 | 11 | —* |
| | | உரித்தாளி—முடியும், நெடுந்தீவு தென்கிழக்கு ஆர். யோசேப்பும். | | | | | |
| 5 | ஷை | .. — | .. 20 வருஷம் சென்ற 2 பனைகளுள்ள தரவைநிலம் | 0 | 0 | 35 | 20 |
| | | பிளான் இலக்கம் 8,375. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 1 | வெட்டை | .. சிதம்பரி இராமலிங்கம் | .. 3 வருஷத்திலிருந்து 10 வருஷம் வரையிலும் சென்ற 5 பனைகளுள்ள தரவைநிலம் | 3 | 0 | 1 | 20 |
| 2 | ஷை | .. — | .. தரவைநிலம் V. C. றோட்டுக்காக சேமிக்கப்படவேண்டியது | 0 | 1 | 1 | —* |
| | | பிளான் இலக்கம் 8,376. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 1 | கடலைத்தோம்பு | .. வயித்தியநாதர் ஐயம்பிள்ளையும், இராமலிங்கம் ஐயாத்துரையும் | ஒரு கிணறுள்ள தரவைநிலம் .. | 0 | 0 | 7 | 30* |
| 2 | ஷை | .. ஷை | .. புகையிலைத்தோட்டம் .. | 0 | 0 | 16 | 30* |
| | | பிளான் இலக்கம் 8,425. குறிச்சி—நெடுந்தீவு வடகிழக்கு. உரித்தாளி—முடியும் நெடுந்தீவு தென்கிழக்கு கே. வைலித்திலிங்கமும், வி. சண்முகமும், நெடுந்தீவு வடகிழக்கு எஸ். சவிரிமுத்துவும். | | | | | |
| 1 | தெரியன்வளவு | .. கந்தன் நாகனும் மறுபேரும் | 2 கொட்டில்களும் 12 வருஷம் சென்ற 3 வேப்பமரமும், 1 வடலியும, 30 வருஷம் சென்ற 4 பனைகளும் உள்ள தரவைநிலம் | 0 | 3 | 1 | 20 |
| | | உரித்தாளி—முடியும், நெடுந்தீவு வடகிழக்கு நாகலிங்கம் சுவாமிநாதனும மறுபேரும. | | | | | |
| 2 | நெய்குளம் | .. நாகன் சின்னவனும மற்றும இருவரும | 2 கொட்டில்களும 40 வருஷம சென்ற 1 பனையுமுள்ள தரவைநிலம | 0 | 1 | 39 | 20 |
| | | உரித்தாளி—முடியும, நெடுந்தீவு தென்கிழக்கு கே. சின்னத்தம்பி கைம்பெண் நாகாத்தையும். | | | | | |
| 3 | கற்பகந்தோட்டம | .. — | .. 1 கொட்டிலும, 12 வருஷம சென்ற 1 வேப்பமரமும, 40 வருஷம சென்ற 4 பனைகளுள்ள தரவைநிலம | 0 | 1 | 3 | 20 |
| | | பிளான் இலக்கம் A11. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—பி. கதிர்வேலுவால் கூட்டிப் பிடிக்கப்பட்ட முடிக்குரிய நிலம | | | | | |
| 1 | கத்தாளம்பிட்டி | .. — | .. ஒலைகால்வேய்ந்த 2 கொட்டில்களும 1 கிணறும, 5 துவக்கம 10 வருஷம சென்ற 6 வடலிகளும, 20 வருஷம சென்ற 9 பனைகளும, 3 வருஷம சென்ற தென்னம பிள்ளைகளுள்ள தோட்டம | 0 | 2 | 33 | 20* |
| | | உரித்தாளி—இல்லை. | | | | | |
| 2 | ஷை | .. பி. கதிரவேலு | .. 20 வருஷம சென்ற 1 பனையுள்ள தரவைநிலம் | 0 | 3 | 31 | 20 |
| | | உரித்தாளி—சின்னன் கந்தையாவால் கூட்டிப்பிடிக்கப்பட்ட முடிக்குரிய நிலம். | | | | | |
| 3 | கலடு | .. — | .. புகையிலைத்தோட்டம் .. | 0 | 0 | 3 | 20 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | கலடு | — | தரவை நிலம் புகையிலைச் செய்கைககாக செப்பணிடப்பட்டது | 0 | 0 | 5 | 20 |

உரித்தாளி—இல்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | கத்தாளம்பிட்டி | — | தரவை நிலம் வழிப்பாதைக்காக சேமிக்கப்படவேண்டியது | 0 | 0 | 9 | —* |
| 6 | புலவு | ஏ. வேலுப்பிள்ளை | 6 வருஷம் சென்ற 3 வடலிகளும் 30 வருஷத்துக்கு மேற்பட்ட 1 பனையுமுள்ள தரவை நிலம் | 0 | 2 | 27 | 30 |

பிளான் இலக்கம் A10. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வேம்பொடி வெளி | — | தரவை நிலம் வழிப்பாதைக்காக சேமிக்கப்படவேண்டியது | 0 | 0 | 27 | —* |
| 2 | ஷை | இ. இராமநாதன் | தரவை நிலம் | 1 | 3 | 34 | 20 |

பிளான் இலக்கம் A13. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காம்பிரமண்டை | மூத்தவன் வைத்தி | தரவை நிலம் | 2 | 0 | 3 | 20 |

பிளான் இலக்கம் A12. குறிச்சி—நெடுந்தீவு நடுக குறிச்சி. உரித்தாளி—அந்த இடத்தில் உள்ள வெள்ளாளர்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சாம்புவன்கட்டல் | வைத்திஐயனும் மறுபேரும் | கொட்டில்கள் உள்ள பனந்தோட்டம் | 1 | 0 | 21 | 300 |

பிளான் இலக்கம் A14. குறிச்சி—நெடுந்தீவு நடுக்குறிச்சி, உரித்தாளி—அந்தோ வைத்தி கைம்பெண் சலமையும் மறுபேரும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிறுவில் மணல் | தொம்மை மரியை கைம்பெண் | தரவை நிலம் | 0 | 0 | 31 | 40 |
| 2 | ஷை | ஷை | தரவை நிலம், 1 வயதுள்ள 3 தென்னைகள் | 0 | 0 | 8 | 40 |
| 3 | ஷை | ஷை | 25 வருஷம் சென்ற பனைகளுள்ள தோட்டம் | 0 | 0 | 18 | 40 |

உரித்தாளி—மனவல் பெண்சவுனம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | தங்கல் வளவு அல்லது வெண்டை வளவு | — | 30 வருஷம் சென்ற 1 பனையுள்ள தரவை நிலம் | 0 | 1 | 21 | 20 |

பிளான் இலக்கம் 8,178. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. காணி கொண்டவர்களின் பெயர்—என். குட்டிப்பிள்ளையும் மறுபேரும்,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | புலம் | — | 40 வருஷம் சென்ற 5 பனைகளுள்ள தரவை நிலம் | 0 | 3 | 24 | 20† |

பிளான் இலக்கம் 8,185. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. காணி கொண்டவர்களின் பெயா—எஸ். அம்பலவாணரும் மறுபேரும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நெளுவினை | — | ஒவித்தை | 1 | 0 | 7 | 20† |

பிளான் இலக்கம் 8,225 குறிச்சி—நெடுந்தீவு நடுக்குறிச்சி. காணி கொண்டவர்களின் பெயர்—கே. எஸ். குமாரசாமி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இளக்குகாலையடி | — | தரவைநிலம் | 0 | 2 | 20 | 50† |

* இது விற்பனவுக்கல்ல.

† மதிப்புவிலையில் தீர்ந்துவிடப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மறு விபரஙகள் வடமாகாணம் கவுண்மேந்து ஏசண்டரிடமிருந்தும் படங்களைப்பற்றி அளவு கந்தோர்த் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு தைமீ 6 ௳ திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

---

**Mannar No. 52.**—1933 ம் ஆண்டு மாசிமீ 28 ௳ திகதி, செவ்வாய்க்கிழமை காலை 10 அளவில் தன் ஆபிசில் பனங்காமத்தில் தன் கூடாரத்தில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு உதவி கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

2 காணித்துண்டுகள், வட மாகாணத்து, மன்னார் டிஸ்திறிக்கு, மாந்தைப் பகுதியிலிருக்கின்றது.

பனங்காமம்.

பிளான் இலக்கம் 6,897. குறிச்சி—பனங்காமம். உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | புலக்காடு | எஸ். எம். ஞானசேகரம்பிள்ளை | பறட்டைக்காடு | 0 | 1 | 14 | 20 |
| 3 | ஷை | ஷை | ஷை | 3 | 3 | 30 | 20 |

இத்துண்டுகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னார் அரசாட்சி உதவி ஏசண்டரிடத்திலும் படங்கள் அளவுகாரப் பெரியதுரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு தைமீ 6 ௳ திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

**Mannar No. 53.**—1933 ம் ஆண்டு பங்குனிமீ 6 ந் திகதி, திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் தன் ஆபிசில் முருங்கன் வாடிவீட்டில் வடமாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு உதவி கவணமேந்து ஏசண்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

4 காணித்துண்டுகள், வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு, நானாட்டான் கிழக்குப் பகுதியிலிருக்கின்றது.

நானாட்டான் கிழக்கு.

பிளான் இலக்கம் 8,267. குறிச்சி—தம்மன்னாக்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பன்னாடைக்காடு .. | — .. | உயர்ந்த காடும் யோதைஅலைக்கட்டும் | 0 | 3 | 38 | —* |
| 2 | ஷை .. | சிரங்கப்பெருமாள் .. | உத்தரவுச்சீட்டில் அரைவாசி துப்பரவு பண்ணப்பட்ட காடு | 4 | 3 | 27 | 20 |
| 3 | ஷை .. | திருமூர்த்தி பொன்னையா | உத்தரவுச்சீட்டில் அரைவாசி வெள்ளாண்மை செய்யப்பட்ட காடு | 5 | 0 | 38 | 20 |
| 4 | தம்மன்னாக்குளத்துக்கமம் | — .. | வெள்ளாண்மைக்காணி, அந்தோனி சவிரிமுத்தும் மறுபேரும் கூட்டி அடைத்த காணி | 1 | 1 | 15 | 50† |

*விற்கப்படமாட்டாது.

†காணியின் பெறுமதியின் அரைவிலைக்குக் கொடுக்கப்படும்.

இத்துண்டுகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னார் அரசாட்சி உதவி ஏசண்டரிடத்திலும் படங்கள் அளவுகாரப் பெரிய துரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு தைமீ 6 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

---

**Mannar No. 54.**—1933 ம் ஆண்டு பங்குனிமீ 7 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் தன் ஆபிசில் உயிலங்குளத்து சேக்குட் வங்களாவில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு உதவி கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

8 காணித்துண்டுகள், வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு மாந்தை வட பகுதியிலிருக்கின்றது.

மாந்தை வடக்கு.

பிளான் இலக்கம் ஏ. ஈ. 3 பீ. எஸ். பீ. பீ. 5. குறிச்சி—பாலைக்குளி. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விககாரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றா. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | கட்டைக்காடு .. | — .. | 7 வயசுடைய தோட்டம், அ. சூசைப்பிள்ளை கூட்டிஅடைத்த காணி | 0 | 0 | 12 | 410* |
| 5 | பாலைக்குளிக்காணி அல்லது கட்டைக்காடு | — .. | விஞசித்தம்பிக்குக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிற பறட்டைக்காடு | 0 | 0 | 23 | 410 |
| 5A | ஷை .. | — .. | அடம்பன் கத்தோலிக்க மிசனுக்குக், குத்தகைக்குக் கொடுக்கட்பட்டிருக்கிற பறட்டைக்காடு | 0 | 0 | 37 | 410 |
| 5B | ஷை .. | — .. | கடைகட்டக்கூடிய பறட்டைக்காடு .. | 0 | 0 | 30 | 410 |
| 5C | ஷை .. | — .. | ஷை .. .. | 0 | 0 | 38 | 410 |
| 5D | ஷை .. | — .. | மனுவல் கைம்பெண் மாரியாயிக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட பறட்டைக்காடு | 0 | 0 | 20 | 410 |

பிளான் இலக்கம் 7,813. குறிச்சி—கருங்கண்டல். உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெண்காணி அல்லது நீக்கிலான் அளவக்கைஅடிப்பிட்டி | கவிரியல் கயித்தான் | பறட்டைக்காடும் வெண்காணியும் .. | 0 | 3 | 22 | 35 |

பிளான் இலக்கம் 8,310. குறிச்சி—கருங்கண்டல். உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெண்காணி .. | — .. | ஒரு பள்ளிக்கூடம் அடங்கிய வெண்காணி யாழ்ப்பாணம் மேற்றிராணியார் கூட்டி அடைத்த காணி | 0 | 1 | 33 | 35 |

* காணியின் பெறுமதியின் அரை விலைக்குக் கொடுக்கப்படும்.

இத்துண்டுகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னார் அரசாட்சி உதவி ஏசண்டரிடத்திலும் படங்கள் அளவுகாரப் பெரிய துரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம ஆண்டு தைமீ 6 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தலாவக்கொல்லையில் குப்பை ஊத்தை முதலியன தாட்கும் நிலமும் அதற்குப் போகும் றோட்டும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A10. குறிச்சி—தலாவக்கொல்லை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 4 | வெஸ்றகோவிறூட்தோட்டம் | தேயிலை .. | இலங்கை தேயிலைதோட்டக் கொம்பனியார் .. | 0 | 0 | 2·50 |
| 5 | ஷை .. | தோட்டறோட்டு | ஷை .. | 0 | 0 | 5·37 |
| 6 | ஷை .. | தேயிலை .. | ஷை .. .. | 0 | 0 | 5·10 |
| 7 | ஷை .. | தேயிலை .. | ஷை .. .. | 0 | 0 | 0·90 |
| 8 | ஷை .. | தேயிலை | ஷை .. .. | 0 | 0 | 25·72 |
| 9 | ஷை .. | தோட்டறோட்டு | ஷை .. .. | 0 | 0 | 4·10 |
| 10 | ஷை .. | தேயிலை .. | ஷை .. .. | 0 | 1 | 5·07 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஞூ மாசி மாசம் 6 ந் தேதியிலன்று 9 மணிக்கு தலாவக்கொல்லை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1933 ம் ஆண்டு தைமீ 7 ந் தேதி.

டபிள்யு. ஜே. எல். ஜெரஜர்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அம்பகொல்லவில் ஒரு கிணற்றுக்கும் அதற்குப் போக்குவரவு செய்யும் தெருவுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 2,981. குறிச்சி—றதவியத்த.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆண்டியமுல்லவத்தை .. | ஒரு கிணறடங்கிய நெற்காணி .. | வேகம்பத்து கோறளை சே. டபிள்யு. அப்புகாமி | 0 | 0 | 1·40 |
| 2 | ஷை .. | வெளிநிலம் ஒரு தென்னை வளவின் பகுதி) | ஷை .. .. | 0 | 0 | 10·44 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 933 ம் ஞூ பங்குனி மாசம் 1 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1933 ம் ஞூ தைமீ 6 ந் வ.

ஈ. டீ. மிலிங்ரன்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றதவியத்தவில் ஒரு கிணற்றுக்கென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமப்படத்து இல. 2,982. குறிச்சி—றதவியத்த.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மெதகின்னேவத்தை .. | ஒரு கிணறடங்கிய வெளிநிலம் (பழைய வளவிற்காக பாகம்) | மெதகின்னேகெதற திசாகாமி, மெதகின்னேகெதற வெலிகமறால, மெதகின்னேகெதற உக்குவண்டா, மெதகின்னேகெதற கிரிவண்டா | 0 | 0 | 1·41 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஞூ பங்குனி மாசம் 1 ந் தேதியிலன்று பிற்பகல் 2·15 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1933 ம் ஞூ தைமீ 6 ந் வ

ஈ. டீ. மிலிங்டன்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

### மின்னேரிக் குளத்தின்கீழ் உள்ள காணிகள் பங்கீடு செய்துகொடுத்தற்கான ஒழுங்கு சம்பந்தமான அறிவித்தல்,

பொல்லனருவைக்கு வடமேற்காக ஏறக்குறைய 12 மைல் தூரத்திலுள்ள மின்னேரிக்குளத்தின்கீழ் நெல் வேளாண்மை செய்வதற்கு ஏற்ற காணித்துண்டுகள் கேட்பதற்கு அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் 1933 ம் ௵ (பெப்ருவரி) மாசி௴ 18 ௳ தேதி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படுமென்று இதனால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் எழுத்துமூலமாக வடமத்திய பாகாண கவண்மேந்து ஏஜன்றருக்கு மேல்விலாசமிட்டு அனுராசபுரத்துக்கு அனுப்பப்படவேண்டியதுமன்றி, விண்ணப்பக்காரர் தங்கள் முழுப்பெயர்களையும் மேல்விலாசங்களையும் எழுதியனுப்பவும் வேண்டும். 1933 ம் ௵ (பெப்ருவரி) மாசி௴ 18 ௳ தேதியின்பின் காணி பங்கிட்டுக் கொடுப்பதற்கு விண்ணப்பக்காரரைத் தெரிவுசெய்யும்பொருட்டாக ஒரு காணிக் கச்சேரி அல்லது பல காணிக்கச்சேரிகள் ஸ்தாபித்து நடத்தப்படும். இந்தக் கச்சேரிகளைக் குறித்து அறிவித்தல்கள் முன்னதாகக் கொடுக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களோடு வைப்புப் பணத்தொகைகள் அனுப்பப்படவேண்டியதில்லை

2. மேட்டுப்பூமிகளும் நெற்காணிகளும் பங்கீட்டிற் கிடைக்கக்கூடியனவாயுண்டு. கவண்மேந்து ஏஜன்றர் தமது நற்கருத்தின்படி எந்த விண்ணப்பத்தையும் அங்கீகரியாது தள்ளிவிடலாம். மேலும், அவரே தெரியப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பக்காரனுக்கும் கொடுக்கப்படவேண்டிய காணியின் விசாலம் எவ்வளவென்றும், தெரியப்பட்ட விண்ணப்பக்காரருக்கு காணித்துண்டுகள் எவ்வண்ணம் பங்கிடுசெய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிப்பதுமன்றி அப்பங்கீடு சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் அவர் செய்யும் தீர்மானம் முடிவானதாகவும் இருக்கும்.

3. இக்காணிகளும் வேறுகாணிகளும் பங்கீட்டிற் பெறுபவர்களுக்கு ஆட்சிநிலையானதாக விருக்கச்செய்யும் நோக்கமாக ஒரு சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று ஆலோசிக்கப்படுகின்றது. இந்தச் சட்டம் விதிக்கப்பட்டதின்பின் அது இக்காணிகளுக்கு ஏற்புடையதாக வருமென்றும் சட்டம் வழங்கத்தொடங்குவதற்குமுன் கொடுக்கப்பட்ட எவ்வுத்தரவுச் சீட்டுகளினதும் பொருத்தங்களையும் நிபந்தனைகளையும் அது மாற்றக்கூடுமென்றும் விண்ணப்பக்காரருக்கு இதனால் அறிவிக்கப்படுகின்றது. இந்தச்சட்டம் விதியாகும் வரையிலும் பங்கீடுகள் பெறத் தெரியப்படுபவர்களுக்கு காணியை ஆட்சிகொள்வதற்கு உத்தரவுச் சீட்டுகள் கொடுக்கப்படும். இவ்வுத்தரவுச் சீட்டுகள் பின்சொல்லிய நிபந்தனைகளுக்கு அமைவாகவிருக்கும், அவையாவன:—

(1) உத்தரவுச் சீட்டு ஐந்து வருஷத்துக்குக் கொடுக்கப்படும்.

(2) உத்தரவுச் சீட்டுப் பெற்றவர் முதல் வருஷத்துக்குள் நெற்காணியைச் செய்கைபண்ண வயலாக்கவும் மேட்டுப் பூமியைச் செய்கைபண்ணித் திருத்தவும் தொடங்கி, கவண்மேந்து ஏஜன்றரின், திருப்திக்கு ஒவ்வொரு வருஷமும் அவ்வேலையைச் செய்து நடத்தி ஐந்தாம் வருஷ முடிவோடு அதைச் செய்து முடிக்கவேண்டும். அதன்பின் குறைந்தபட்சம் காணியில் நாலில் மூன்று பங்கையாகுதல் ஒவ்வொரு வருஷமும் அவர் செய்கைபண்ணவேண்டும்.

(3) நாலாம் நிபந்தனையில் ஏற்படுத்தியிருக்கும்வண்ணமாகவன்றி மற்றப்படிக்கு முதல் ஐந்து வருஷங்களுக்கும் காணியின்பேரில அரசாட்சியாருக்கு யாதும் பணங் கொடுக்கும்படி உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் கேட்கப்படமாட்டார்.

(4) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் தாம் ஆட்சிசெய்த மூன்றும் வருஷத்தின்பின் அரசாட்சியாரால் தீர்மானிக்கப்படும் பிரகாரம், வருஷமொன்றுக்கு ஒரு ஏககருக்கு 2 ரூபாவுக்கு மேற்படாத நீர்ப்பாய்ச்சல் வரி கொடுக்வேண்டியவர் ஆவர்.

(5) உத்தரவுச் சீட்டுப் பெற்றவர் இப்பொழுது வழங்கிவரும் அல்லது இனிமேல் நியாய முறையாக உண்டாக்கப்படும் எல்லா நீர்ப்பாய்ச்சல் விதிகளுக்கும் பயிர்ச்செய்கை விதிகளுக்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

(6) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் காணியிலுள்ள வெட்டு மரங்களை வேலியடைப்பதற்கு அல்லது காணியில் காவற்கொட்டில்கள் அல்லது வீடுகள் கட்டுவதற்கு உபயோகிக்க உரிததுடையவர். ஆயினும், உத்தரவின்றி அக்காணியிலிருந்து யாதேனும் வெட்டுமரம் கொண்டுபோக அவருக்கு உரிதது யாதும் இல்லாதிருத்தல் வேண்டும். விலை கொடுத்தல் அல்லது வேறு காரியங்களைப்பற்றித் தீர்மானிக்கப்படும் பொருத்தங்களுக்கமைவாக அவ்வுத்தரவு கொடுக்கப்படும்.

(7) உத்தரவுச் சீட்டுப்பெற்றவர் கவண்மேந்து ஏஜன்றரின உத்தரவின்றி இந்த உத்தரவுச் சீட்டின்படி தமக்குள்ள எச்சோந்தைகளையும் எவ்வகையாகவேனும் பராதீனப்படுத்தவாவது, ஈடுவைக்கவாவது அல்லது வேறுவகையாகக் கொடுத்துவிடவாவது படாது. அப்படியான பராதீனப்படுத்தல், ஈடு அல்லது கொடுத்துவிடுகை எதுவும் பெலனற்றதும் பெறுதியற்றதுமே ஆகும்.

(8) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் உத்தரவுச்சீட்டின் நிபந்தனைகளில் எதையும் செய்து நிறைவேற்றத்தவறுமிடத்து அல்லது உத்தரவுச் சீட்டுப் பெற்றவருக்கு மாறாகக் கொடுக்கப்பட்ட ஒரு கோட்டுத்தீர்வையை நிறைவேற்றுவதில் அக்காணி அல்லது உத்தரவுச்சீட்டுப் பெற்றவருக்குரிய சோந்தைகள் பிடிக்கப்படுமிடத்து அல்லது விற்கப்படுமிடத்து, கவண்மேந்து ஏஜன்றர் உத்தரவுச்சீட்டை அழித்துவிட்டு காணியையும் அதிலுள்ள விளைவுகள், தோட்டங்கள், கட்டடங்கள் அல்லது வேறு திருத்திய பொருட்கள் எவைகளையும் தம் ஆட்சியில் ஒப்புக்கொள்ளலாம்.

(9) உத்தரவுச் சீட்டுப் பெற்றவர் உத்தரவுச் சீட்டின் காலவெல்லைக்குள் இறந்து போனால் உத்தரவுச்சீட்டு முடிவாகி காணியும் மறுபடி முடிக்குரியதாகிவிடவேண்டும். ஆனால், கவண்மேந்து ஏஜன்றர், தமது நற்கருத்தின்படி ஒரு புதிய உத்தரவுச் சீட்டை உத்தரவுச் சீட்டுப்பெற்றிருந்து காலஞ்சென்றவரின் உரிமைக்காரரில் அல்லது அவரை அன்டியிருந்தவர்களில் ஒருவருக்கு அல்லது சீர் நிருவாகங்கள் இருக்கிறபடிக்கு கவண்மேந்து ஏஜன்றருக்கு நீதியென்று காணுகிறபடி வேறொருவருக்குக் கொடுக்கலாம்.

(10) உத்தரவுச்சீட்டு அழித்து விடப்படுமாகில் அல்லது முடிந்து விடுமாகில் உத்தரவுச் சீட்டுப்பெற்றவரால் அல்லது வேறெவராலும் காணியிற் செய்யப்பட்டுள்ள, திருத்தங்களுக்காக யாதும் நஷ்டபூர்த்தி பெறுவதற்கு உத்தரவுச்சீட்டுப் பெற்றவருக்கேனும் அவர் மூலமாக உரித்துப்பேசும் வேறெவருக்கேனும் யாதும் ஒரு உரித்தும் இருக்கமாட்டாது.

(11) ரோட்டுக்கள் திறக்கவேனும் வாய்க்கால்கள் வெட்டவேனும் அல்லது வேறெந்த நோக்கத்துக்கேனும் அரசாட்சியாருக்கு இனிமேல் தேவைப்படக்கூடியதாயுள்ள தமக்குப் பங்கீடு செய்து விடப்பட்ட காணியின் எப்பாகத்தையும் உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் யாதும் நஷ்டபூர்த்தி கேளாமல் ஒப்புவித்துவிடல் வேண்டும்.

4. யோத எலைக்கும் மின்னேரி ஓயவுக்குமிடையில் பெரிய ரோட்டிலிருந்து றெயில்வேப் பாதைவரைக்குமுள்ள கண்டம் பங்கு செய்வதற்குமுன் அரசாட்சியாரின் செலவில் வெட்டித் திருத்தப்பட்டு, ஐந்து ஏக்கர் கொண்ட துண்டுகளாக கிராமவாசிகள் வகுப்பைச்சேர்ந்த விண்ணப்பக்காரருக்கென்று புறம்பாகப் பங்கீடுசெய்து கொடுக்கப்படும். காடுவெட்டித் துப்புரவாக்கினதில் வந்த செலவொன்றும் அவர்களிடமிருந்து அறவிடப்படமாட்டாது இனிமேல் பொருந்தி ஒழுங்கு பண்ணப்படும் வீதங்களின்படி இக்கண்டத்தின் பாகங்களை வெட்டித் துப்புரவு பண்ணுவதற்கென்று கொந்திறாத்துகளை இவ்வகுப்பைச்சேர்ந்த பங்கீட்டுக்காரருக்குக் கொடுக்க வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டிருக்கின்றது. விண்ணப்பக்காரா தங்கள் விண்ணப்பப்பத்திரங்களில் இவ்வகையான வேலை பொறுப்பேற்றுச் செய்யத் தங்களுக்கு விருப்பமோவென்று காட்டவேண்டும். இவ்வேலை சித்திரை மாசக் கடைசியில் அல்லது வைகாசி மாசத்தின் முதற் பகுதியின் முதற் பகுதியிற் தொடங்கக்கூடும்.

5. இடை வகுப்புக்குச்சேர்ந்த இலங்கை வாசிகளுக்கு ஒவ்வொன்றும் 50 ஏக்கர் வரையிலும் செல்லக்கூடிய கண்டங்களாக வெட்டித் துப்புரவாக்கப்படாத காணி கொடுக்கப்படும்.

6. கிராம வாசிகளுக்கும் இடை வகுப்புக்குச்சேர்ந்த இலங்கை வாசிகளுக்கும் வேணடிய காணிகள் கொடுக்கப்பட்டதின் மேல் பெரிய கண்டங்களின் விஷயத்தில் விண்ணப்பங்கள் கவனிக்கப்படலாம்.

7. தொடக்கத்திலிருந்தே காட்டுக் காய்ச்சல் அனுகாவண்ணம் தடுப்பதற்கான உபாயங்களை ஆரம்பித்து முதலில் காடுவெட்டித் துப்பரவு செய்யும்போதிலும் காணித்துண்டுகளிற் குடியிருக்க வருவோர் வந்து சேர்ந்து குடியிருக்கத் தொடங்கின பிறகும் இவ்வுபாயங்களைச் செய்து கொண்டு

போகவேண்டுமென்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. மின்னேரியாவிலும் ஹந்தமுனையிலும் றேயில் வண்டி வந்து நிற்கும் மிடங்கள் இப்பாகத்துக்கு மிகச் சமீபத்தி லிருக்கின்றன.

சீ. வீ. பிறேரா,
காணிக் கொம்மிஷனர்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஸ்ரீல ஜனுவரிமீ 5 ந் தேதி.

குறிப்பு.—மின்னேரிக்குளத்தின் கீழ் உள்ள காணிகளைக் குறித்த ஒழுங்கின் பிரகாரம் பங்கீடு செய்து கொடுக்கப்படும் காணிகளுக்காக அரசாட்சியாருக்கு வருஷா வருஷம் கொடுக்கப்படவேண்டிய தொகை ஆறும் வருஷம் தொடக்கம் 24 ம் வருஷம் வரையிலும் அவ்வருஷம் உட்படவும் வருஷம் ஒன்றுக்கு 50 சதமாயிருத்தல் வேண்டுமென்றும் அதன்பின் கொடுபட வேண்டிய தொகைகள் மறுபடி மதிக்கப்படவேண்டுமென்றும் இராச்சியமந்திர சபையாரால் நிர்ணயிக்கப்பட்டது. சட்டம் விதிக்கப்பட்டதின்மேல் அதின்படி இந்நிர்ணயத்தை வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது.

---

இத்தாலறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னால் சொல்லப்படும் துறை ஆயக்குத்தகைகளை 1933 ம் ஆண்டு தை மாதம் 24 ந் திகதி தொடக்கம் புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1933 ம் ஆண்டு தை மாதம் 23 ந் திகதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

பண்ணைத்துறை.

பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபட வேண்டும். தபால் வழியாய் அனுப்பப்பட்டவையுங் குறித்த நேரந் தேதியின்பின் கிடைப்பவையுங் கவனிக்கப்படா.

ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதிபெற்ற ஆதனப் பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றிலொருபங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

முடிக்குரிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதிபோடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

பிணையாகக் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகளுக்குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப் பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பீ. மோட்டிமர்.
கவண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1933 ம் ஆண்டு தைமீ 9 ந் உ.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.